**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075896

C

1. District மாவட்டம் : ஈரோடு   PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு ஈரோடு   Year: ஆண்டு 2021   FIR No. மு.த.அ. எண் 12/AC/2021   Date: நாள் 14.12.2021 08.00 மணி

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as amended by the P.C. (Amendment) Act 2018   Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: -
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: -
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல் 08.11.2021 15.30 மணி   Date to : நாள் வரை 13.12.2021
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் முதல்   Time to : நேரம் வரை 16.45 மணி வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.12.2021   Time : நேரம் 19.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD VOL IV   Time : நேரம் 13.12.2021 19.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக (கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் —   (b) Address : முகவரி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 5வது மாடியில் உள்ள H-செக்சன்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —   District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B. பாலாஜி   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பாலசுப்பிரமணியம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27.12.1979   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் தலைமைக்காவலர் தமிழ்நாடு காவல்துறை   (g) Address : முகவரி க.எண் 193/100 எஸ்.எஸ் கோவில் வீதி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (வயது தெரியவில்லை),
   திரு. ரவி, உதவியாளர், H-பிரிவு, 5வது மாடி, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் தாமதமில்லை —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபட்ட / சமவித்துள்ள சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவுபட்ட / சமவித்துள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any : —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது:

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/12/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
14/12/21

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.12.2021.
09.30 மணி.

Name பெயர் ப. ஆறுமுகம்.
Rank நிலை காவல் ஆய்வாளர்.
ஊ.த.கு.பிரிவு, ஈரோடு.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 12/AC/2021 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திரு.G.ஆறுமுகம் ஆகிய நான் 13.12.2021 தேதி மாலை 19.00 மணிக்கு நிலைய அலுலவலில் இருந்தபோது கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, எஸ்.எஸ்.கோவில் வீதி, கதவு எண்.193/100, பாலசுப்பிரமணியம் அவர்களின் மகன் B.பாலாஜி என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் கம்பியூட்டரில் டைப்செய்யப்பட்ட எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் B.பாலாஜி, வயது-42 த/பெ பாலசுப்பிரமணியம், கதவு எண்.193/100, எஸ்.எஸ்.கோவில் வீதி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். பெறுதல் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு, ஈரோடு. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் B.A, படித்துள்ளேன், தமிழ்நாடு காவல் துறையில் 1.12.2003ல் இரண்டாம் நிலை காவலராக பணியில் சேர்ந்து தற்போது சிறப்பு இலக்கு படை, சத்தியமங்கலம் தலைமயிடமாக கொண்டு கோயம்புத்தூர் மாவட்டம், மாங்கரை முகாம் சிறப்பு இலக்கு படையில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், சமத்தூர் கிராமம், ஸ்ரீ மகாலட்சுமி கார்டன், மனை எண்.56 என்ற வீட்டு மனையினை துறை அனுமதி பெற்று 2017-ம் ஆண்டு வாங்கினேன். அந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வந்த வீட்டு கடன் பிரிவு அலுவலகத்தில் ரூ.25,00,000/- வீட்டு கடன் கேட்டு கடந்த மார்ச் மாதம் மனு அளித்திருந்தேன். நான் ஈரோடு மாவட்டம், சத்திமங்கலம் சிறப்பு இலக்கு படையில் பணிபுரிந்து சம்பளம் பெறுவதால் மேற்படி மனுவினை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வீட்டு கடன் பிரிவில் கொடுத்து, வீட்டு கடன் பெற்றுக்கொள்ளும்படி எனது மனுவினை 28.5.2021-ம் தேதி என்னிடமே திருப்பி கொடுத்தார்கள். நான் அந்த ஆவனங்களுடன் கூடிய எனது மனுவினை பெற்று அன்றையதினமே ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக தபால் பிரிவில் பதிந்துவிட்டு 5வது மாடியில் உள்ள எச் செக்சன் வீட்டு கடன் பிரிவில் என்னையே கொடுக்கச்சொன்னதின் பேரில் வீட்டு கடன் பிரிவில் கொடுத்தேன். அப்போது அங்கு அந்த அலுவலகத்தில் இருந்த அலுவலரிடம், எனது வீட்டு கடன் சம்மந்தமாக பார்க்கும் பிரிவு அலுவலர் திரு.ரவி, உதவியாளர் என்று தெரிந்து கொண்டு, அப்போது அவர் அலுவலகத்தில் இல்லாததால், அவரின் போன் நம்பர் 98423 09242-ஐ பெற்றுக்கொண்டு வந்துவிட்டேன். அதன்பிறகு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக, வீட்டு கடன் பிரிவில் இருந்து எந்த தகவலும் வராததால், கடந்த 20.10.2021, 27.10.2021 ஆகிய தேதிகளில் நான் எனது போன் நெம்பர் 87787 04732 என்ற எண்ணிலிருந்து திரு.ரவி, உதவியாளர் அவர்களுக்கு அவர்களின் செல்போன் எண் 98423 09242 ற்கு தொடர்பு கொண்டு எனது வீட்டு கடன் மனு பற்றி கேட்டேன். அப்போதெல்லாம் அவர் என்னை நேரில் வரும்படி கூறினார். அதனால் 08.11.2021 ம் தேதி மதியம் சுமார் 03.30 மணிக்கு திரு.ரவி, உதவியாளர் அவர்களை அவர்களது அலுவலகத்தில் நேரில் சென்று எனது மனு பற்றி விசாரித்தபோது, "என்ன சார் உங்கள நேரில் வரச்சொன்னால் வரமாட்டீங்கிறீங்க" என்று சொன்னார். அதற்கு நான் விடுமுறை கிடைக்காததால் வரமுடியவில்லை என்றும், நான் மனு கொடுத்து சுமார் 6 மாதம் ஆகியும் எனக்கு வீட்டு கடன் உத்தரவு கிடைக்கவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்தேன். அதற்கு அவர் உங்கள் மனுவைப்பார்த்தேன் வீடுகட்ட முன்பணம் ரூ.25,00,000/- கேட்டு மனு

கொடுத்துள்ளிர்கள், கொஞ்சம் செலவாகும் அது சம்மந்தமாக பேசலாம் என்றுதான் உங்களை நேரில் வரச்சொன்னேன், நீங்கள் 25 இலட்சம் ரூபாய் லோன் கேட்டுள்ளீர்கள், அதில் 1 சதவீதம் கமிசன் அதாவது 25 ஆயிரம் ரூபாய் எனக்கு கொடுத்தால் மட்டுமே வீட்டு கடன் பெற உங்கள் கோப்பினை ரெடி செய்து அதிகாரிகளிடம் சேங்சன் ஆர்டர் பெற்றுத்தர முடியும் என்று சொன்னார். அதற்கு நான் சார் அவ்வளவு தொகை ரெடி பண்ண முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் சரி தற்போது உங்களுக்கு முதல் தவணையாக 12.5 இலட்சம் மட்டுமே சேங்சன் ஆகும். மீதி 12.5 இலட்சம் இரண்டாவது தவணையாக சேங்சன் ஆகும். எனவே, 10 ஆயிரம் ரூபாய் முதலில் முதல் தவணைக்கு சேங்சன் பெறுவதற்கு கொடுங்கள். மீதி 15 ஆயிரம் ரூபாயை இரண்டாவது தவணை சேங்சன் பெறுவதற்கு முன்பு கொடுங்கள். இந்த பணத்தை நான் மட்டும் வைத்துக்கொள்ள மாட்டேன் மற்றவர்களுக்கும் நான் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நானும் பார்க்கலாம் சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மீண்டும் எனக்கு வீட்டு கடன் சேங்சன் ஆர்டர் கிடைக்கப்பெறாததால், 23.11.2021 மற்றும் 02.12.2021 ஆகிய தேதிகளில் திரு.ரவி, உதவியாளர் அவர்களை அவரது போனிற்கு தொடர்பு கொண்டு எனது மனு பற்றி விசாரித்தபோது, முதல் தவணையாக 10 ஆயிரம் ரூபாய் தனக்கு கொடுத்தால் மட்டுமே முதல் தவணை சேங்சன் பெற்றுத்தர முடியும் என்று கறாராக சொன்னார். அதனால், மீண்டும் நான் திரு.ரவி, உதவியாளர் அவர்களை நேரில் சந்தித்து பணம் இல்லாமல் வீட்டு கடன் சேங்சன் பெற கெஞ்சி கேட்டு பார்க்கலாம் என இன்று 13.12.2021ம் தேதி மதியம் சுமார் 2.15 மணிக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்து வீட்டு கடன் பிரிவில் உள்ள உதவியாளர் திரு.ரவியை சந்தித்து எனது வீட்டு கடன் சம்மந்தமாக கொடுத்த மனு மீதான சேங்சன் ஆர்டர் பற்றி கேட்டேன். அப்போது அவர் ஏற்கனவே கேட்டபடி முதல் தவணையாக 10 ஆயிரம் ரூபாய் அவருக்கு கொடுத்தால் மட்டுமே எனக்கு வீட்டு கடன் முதல் தவணையாக ரூபாய் 12.5 இலட்சத்திற்கு சேங்சன் ஆர்டர் பெற்றுத்தருவேன் என்று மீண்டும் அதையே அறிவுறுத்தி சொன்னார். நானும் வேறுவழியில்லாததால் சரி என்று சொன்னேன். அதற்கு அவர், நான் உங்களுக்கான வீட்டு கடன் சேங்சன் ஆர்டரை சாய்ந்தரத்திற்குள் ரெடி செய்துவிடுகிறேன், எதற்கும் என்னிடம் சாய்ந்தரம் போனில் கூப்பிட்டு உறுதி செய்து கொண்டு நேரில் வந்து பணத்தை கொடுத்து விட்டு ஆர்டர் பெற்று செல்லுங்கள் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டு கிளம்பி வந்துவிட்டேன். பின்னர், திரு.ரவி அவர்கள் சொன்னதுபோல அவரை இன்று சாயந்திரம் சுமார் 4.45 மணிக்கு திரு.ரவி, உதவியாளர் அவர்களை போனில் தொடர்பு கொண்டு பேசியபோது, திரு.ரவி அவர்கள் என்னிடம் உங்களது வீட்டு கடன் சேங்சன் ஆர்டர் சற்று நேரத்தில் ரெடியாகிவிடும் என்றும் நான் ஏற்கனவே கேட்ட பணத்துடன் உடனே வாருங்கள் என்று சொன்னார். அதற்கு நான் பணம் ரெடியாகவில்லை என்று கூறியபோது, திரு.ரவி, உதவியாளர் அவர்கள் பரவாயில்லை நாளை (14.12.2021) காலை 11.00 மணிக்கு 10 ஆயிரம் ரூபாயை கண்டிப்பாக கொண்டு வந்து தன்னிடம் கொடுத்துவிட்டு வீட்டு கடனுக்கான சேங்சன் ஆர்டரை கையோடு பெற்றுச் செல்லுங்கள் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லி போனை வைத்துவிட்டேன். பிறகு நான் யோசனை செய்ததில், எனது வீட்டு கடன் சேங்சன் ஆர்டர் பெற ஏற்பாடு செய்ய 25 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்டு, அதில் முதல் தவணையாக 10 ஆயிரம் ரூபாய் லஞ்சமாக கேட்கும் ஈரோடு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், 5 வது மாடியில் உள்ள வீட்டு கடன பிரிவு எச் செக்சன், உதவியாளர் திரு.ரவி, அவர்களுக்கு லஞ்சமாக 10 ஆயிரம் ரூபாயை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கும் திரு.ரவி, உதவியாளர்

அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (B.பாலாஜி) 13.12.21 இடம்: ஈரோடு நாள் : 13.12.2021

Madam,

Received the above said Tamil computer typed complaint on 13.12.2021 at 19.00 hrs, Sd/- (xxxxxxxx) 13.12.2021 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Madam,

A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the Accused was found to be bad. Hence, After getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Erode V&AC Cr.No.12/AC/2021 u/s 7(a) of the PC act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018, at 08.00 hrs on 14.12.2021. The original FIR along with the complaint of Tr.B.Balaji is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, DVAC, Chennai. Sd/- (xxxxxxxx) 14.12.2021 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

14/12/2021

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.